**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.**

**CC.No.18/2023**

**வழக்கு சாட்சி PW.4**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **நாகன்** | தொழில் | : தோட்டத்து வேலை செய்து வருகிறேன். |
| தகப்பனார் பெயர் | : சின்னச்சாமி | கணவர் பெயர் | : –––– |
| கிராமம் | : குப்பம்மாள்பட்டி | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 45/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 16.02.2026 |

**( எதிரி ஆஜரில் உள்ளார்)**

**முதல் விசாரணை :**

நான் குப்பம்மாள்பட்டியில் வசித்து தோட்டத்து வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையதல்ல. வழக்கு குறித்து எனக்கு எந்த விபரமும் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பில் மேற்கண்ட சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்குமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க நீதிமன்ற அனுமதியுடன் மேற்கண்ட சாட்சி அரசுத் தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

கடந்த 21.11.2023ம் தேதி காலை 10.15 மணியளவில் குப்பம்மாள்பட்டியில் நான், நாகராஜும் முன்னிலையாயிருக்க இவ்வழக்கு சம்பவம் தொடர்பாக போலீசார் எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் தயார்

செய்தார்கள் என்றாலும் அதற்கு நானும், நாகராஜும் கையொப்பம் செய்துவிட்டு எதிரி கேட்டக்கொண்டபடியால் எதிரிக்கு ஆதரவாக, வழக்கிற்கு விரோதமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN
Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.02.16 22:15:58 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.

**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.**

**CC.No.18/2023**

**வழக்கு சாட்சி PW.5**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **நாகராஜன்** | தொழில் | : கூலி |
| தகப்பனார் பெயர் | : பாண்டி | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : குப்பம்மாள்பட்டி | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 41/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 16.02.2026 |

**( எதிரி ஆஜரில் உள்ளார்)**

<u>முதல் விசாரணை :</u>

நான் குப்பம்மாள்பட்டியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான். தேதி, வருடம் நினைவில்லை. கடந்த வருடம் மாலை 04.00 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது முருகனுக்கும் , மற்றொரு நபருக்கும் குப்பம்மாள்பட்டி சொசைட்டி அருகே நடந்த சண்டை தொடர்பாக என்னிடம் கையொப்பம் போடச்சொன்னார்கள், நான் கையொப்பம் போட்டேன். நான் சண்டையை நேரில் பார்த்தேன். முருகனும், ஆறுமுகமும் அடித்து மல்லுக்கட்டிக்கொண்டார்கள். நான் வேலையை விட்டு சுமார் 2–3 மணியளவில் வீட்டிற்கு வந்துக்கொண்டிருந்தபோது சண்டையைப்பார்த்தேன். நான் பாதியில் வீட்டிற்கு வந்துவிட்டேன் . போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

21.11.2023 ம் தேதி காலை 10.15 மணியளவில் குப்பம்மாள்பட்டியில் உள்ள ஒரு தோட்டத்தில் இருந்தேன் . முருகனும், ஆறுமுகமும் மாற்றி மாற்றி மல்லுகட்டிக்கொண்டார்கள் என்றால் சரிதான் . ஆறுமுகம் மனைவி தொடர்பாக முருகனும், ஆறுமுகத்திற்கும் அவ்வப்போது சண்டை வரும். காலை 10.15 மணியளவில் சண்டை சம்பவம் நடந்தபோது நான் சண்டை நடக்கும் இடத்தில் இருந்து தூரத்தில் இருக்கும் தோட்டத்தில் இருந்தேன் என்றால் சரிதான் . தாண்டிக்குடி காவல்நிலைய போலீசார் 21.11.2023 ம் காலை 10.15 மணிளவில் என் முன்னிலையில் படம் வரைந்து அதற்கு சான்றாக கையொப்பம் பெற்றார்களா என்றால் இல்லை.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN Digitally signed by R ARUN PANDIAN Date: 2026.02.16 22:16:04 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.